

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 43.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், பூவிருந்தவல்லி நகர்மன்றத் தலைவர் திருமதி. காஞ்சனா சுதாகர், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குனர் இராம. சுந்தரபாண்டியன், ஸ்விட்ச் மொபிலிட்டி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மற்றும் அசோக் லேலண்டு நிறுவனத்தின் தலைமை இயக்க அலுவலர் கணேஷ் மணி மற்றும் உயர் அலுவலர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 43.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 214.50 கோடி ரூபாய் மதிப்பிலான பயணிகளின் தேவைக்கேற்ப உயரத்தை குறைக்கும் வசதி கொண்ட 45 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம்ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், பூவிருந்தவல்லி நகர்மன்றத் தலைவர் திருமதி.காஞ்சனா சுதாகர், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குனர் இராம. சுந்தரபாண்டியன், ஸ்விட்ச் மொபிலிட்டி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மற்றும் அசோக் லேலண்டு நிறுவனத்தின் தலைமை இயக்க அலுவலர் கணேஷ் மணி, உயர் அலுவலர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை பன்னாட்டு விமான நிலைய விரிவாக்கப் பணிகளில் தாமதம் ஏன்?

## நாடாளுமன்றத்தில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 21 - விமான நிலைய பணிக்கான காலவரம்பை ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணங்கள் என்ன என்று தயாநிதிமாறன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

குறிப்பாக சென்னை பன்னாட்டுவிமானநிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணியில் ஏற்பட்டுள்ள தாமதம் போல் மற்ற புதிய விமான நிலைய பணிகளும் பாதிக்குமா என்று விமான போக்குவரத்துத்துறை அமைச்சகத்துக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :



சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்க பணி, மார்ச் 2026 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டு உறுதிமொழிகள் அளிக்கப்பட்டிருந்தது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும் இப்போது அந்தப் பணிக்கான காலவரையை 2026 இறுதி அல்லது 2027 தொடக்கம் வரை என நீட்டித்துள்ளதற்கான காரணங்கள் என்ன?

விமான நிலைய பணிக்கான திட்டத்தை விரைவுபடுத்தி நிறைவு செய்ய ஒன்றிய அரசும் இந்திய விமான நிலைய ஆணையமும் (AAI) எடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகள் என்ன? குறிப்பிட்ட காலத்திற்கு பணியை முடிக்காமல் தாமதம் ஏற்பட்டதற்காக விதிக்கப்பட்ட இழப்பீடு (liquidated damages) மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைக்க பயணிகளுக்கான போக்குவரத்து மேலாண்மை திட்டங்களின் விவரங்கள் என்ன?

இந்தத் தாமதத்தால் திட்டமிடப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை மற்றும் முதலீடுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் க்ரீன் ஃபீல்டு உட்பட மற்ற புதிய விமான நிலைய திட்டங்களை எந்தவகையிலாவது பாதிக்குமா?

விமான நிலைய பணிக்கான காலவரம்பை மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணங்கள்? திருத்தப்பட்ட செலவு விவரங்கள், நிதி சார்ந்த விளைவுகளுக்கு பொறுப்பேற்பது ஆகியவற்றை விவரிக்கும் ஒரு முறையான தாமத அறிக்கையை ஒன்றை அரசு வெளியிட உத்தேசித்துள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

## ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. பிரிவு

# மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீட்டை உயர்த்திடுக!

## மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.21

இதர பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் வலியுறுத்தினார்.

ஓபிசி, எஸ்.சி, எஸ்.டி சமூகங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் ஒன்றிய அரசால் இழைக்கப்படும் அநீதிகள் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் பி.வில்சன் பேசியதாவது:-

எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. எட்டு ஒன்றிய நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன.. வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. பணவீக்கமானது ரூபாயின் மதிப்பை சிதைத்துவிட்டதோடு, பொருளாதார சூழ்நிலைகள் வியத்தகு அளவில் மாறிவிட்டன. இருப்பினும் ஓபிசி கிரீமி லேயரைத் தீர்மானிப்பதற்கான வருமான உச்ச வரம்பு ஆண்டுக்கு எட்டு இலட்சம் என்கிற அளவிலேயே இருக்கிறது. 2017 ஆம் ஆண்டில் தங்கம் ஒரு கிராமுக்கு 3,000 ஆக இருந்தபோது இந்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தங்கத்தின் இன்றைய மதிப்போ ஒரு கிராமுக்கு 12,000 எனும் அளவில் 400% அதிகரித்துள்ளது.

கிரீமி லேயர் உச்சவரம்பானது ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அந்த வகையில் இரண்டு முறை செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் செய்யப்படாமல் தாமதப்படுத்தப்பட்டு விட்டது.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையமானது இந்த உச்சவரம்பை உயர்த்திட பரிந்துரைத்த நிலையிலும், ஒன்றிய அரசாங்கமானது அதனை ஏற்றுக் கொள்ளாமல் புறந்தள்ளிவிட்டது.

ஒரு விண்ணப்பதாரரின் குடும்ப வருமானத்தைக் கணக்கிடும் போது, ஊதியத்தையும் சேர்த்துக் கணக்கிடும் ஒன்றிய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் நடைமுறை பாகுபாடானதாகும்.



பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இந்தச் சட்டவிரோத நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதுமட்டுமின்றி யூபிஎஸ்சி அமைப்பும் இதையே செய்கிறது.

இத்தகைய நடைமுறைகள், சம்பள வருமானமும் விவசாய வருமானமும் கிரீமி லேயர் கணக்கீட்டில் சேர்க்கப்படக் கூடாது என்று தெளிவாகக் கூறும் 1993 ஆம் ஆண்டின் அலுவலக குறிப்பாணைக்கு முற்றிலும் எதிரானவை.

இதன் காரணமக, UPSC தேர்வுகள் மூலம் நடைபெறும் நியமனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் வழங்கப்படும் இடஒதுக்கீட்டை பெற முயற்சிக்கும் விண்ணப்பதாரர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அரசாங்கமானது தனது கடமையை சரிவர செய்யாத நிலையில், விண்ணப்பதாரர்கள் பாதிக்கப்படுவது கவலைக்குரியதாகும்.

கிரீமி லேயர் முறை சீரமைப்பதற்கான பாராளுமன்றக்குழுவானது, 2019 ம் ஆண்டு அளித்த அறிக்கையில் இந்த நடைமுறையை கடுமையாக கண்டித்ததுடன், உடனடியாக அதை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. எனினும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கையினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. எட்டு ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படாத இந்த வரம்பு மற்றும் சட்டவிரோத நடைமுறையினால் மத்திய பல்கலைக்கழகங்களில் உள்ள OBC பேராசிரியர் பணியிடங்களில் சுமார் 80% காலியாகவே உள்ளது.

மத்திய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்ட 2537 பேராசிரியர் பணியிடங்களில், 423 பணியிடங்கள் (16.67%) மட்டுமே OBC சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியானால், அரசியலமைப்புச் சட்டப்படி கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய 27% இடஒதுக்கீடு எங்கே போனது?

21 IIT , 13 IIM களில் இருந்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதில்களின் படி, 21 IIT களில், வெறும் 11.2% பேராசிரியர்கள் மட்டுமே ஓபிசி சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதே போன்று 6% பேர் எஸ்.சி. சமூகத்தையும், 1.6% பேர் எஸ்.டி.சமூகத்தையும் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

13 IIM களில், இந்த விகிதம் இன்னும் குறைவாக இருக்கிறது. வெறும் 9.6% பேராசிரியர்கள் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், 5% பேர் எஸ்.சி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், 1% பேர் எஸ்.டி வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஏறத்தாழ 2 IITகளிலும் 3 IIMகளிலும், பேராசிரியர் பணியிடங்களில் 90%க்கும் அதிகமானவை பொதுப் பிரிவினர் வசமே உள்ளது. 8 IITக்கள் மற்றும் 7 IIM களில் 80% அதிகமான பேராசியர்கள் பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இது IIM கல்வி நிறுவனமா அல்லது பொதுப்பிரிவினருக்கான பிரத்யேகமையமா என்ற கேள்வி எழுகிறது.

ஒன்றிய அரசின் பணியாளர் நியமன முறையில் இந்த உச்சவரம்பின் தாக்கம் தெளிவாகத் தெரிகிறது.

தற்போதைய குரூப் A அதிகாரிகளில் 18.07% மட்டுமே OBC வகுப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

ஒன்றிய அரசின் முக்கியமான 90 உயர்மட்ட நிர்வாக அதிகாரிகளில், OBC சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் மட்டுமே உள்ளனர்; அவர்களுக்கும் கூட ஒப்பீட்டளவில் குறைந்த முக்கியத்துவம் கொண்ட துறைகளே ஒதுக்கப்பட்டுள்ளன.

பணியாளர் நியமன திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் பணியாற்றும் 322 அதிகாரிகளில், 16 பேர் எஸ்.சி வகுப்பையும்,, 13 பேர் எஸ்.டி வகுப்பையும், 39 பேர் ஓபிசி வகுப்பையும் சார்ந்தவர்கள்.. மாறாக 254 பேர் உயர் சாதியினரைச் சேர்ந்தவர்கள்.

இப்படியான சூழ்நிலையில், ஒன்றிய அரசின் பணிகளுடைய நேர்முகத்தேர்வுகளின் போது, சரியான நபர் காணப்படவில்லை என்ற பதத்தை பயன்படுத்தியோ அல்லது முறைகேடான ரோஸ்டர் முறையின் வழியாகவோ, SC/ST/OBC வகுப்பைச் சார்ந்தவர்கள் அடிக்கடி திட்டமிட்டு நிராகரிக்கப்படுகின்றனர்.

இதுதான் சமூக நீதியா?

இந்தியா என்பது திறமையை மதிக்கும் நாடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் OBC, SC, ST வகுப்பை சார்ந்தவர்கள் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் தருணத்திலேயே அந்த 'திறமை' என்ற அளவுகோல் செயலிழந்துவிடுவது போலவே தெரிகிறது.

2014 முதல் ஒவ்வொரு விஷயத்திற்கும் கால நீட்டிப்பு செய்யப்படுவதைத் தவிர SC/ST/OBC சமூகத்தின் நலன்களுக்காக எந்தவொரு சட்டமும் இயற்றப்படவில்லை..

எனவே, அரசியலமைப்பு திருத்தங்களின் மூலம் ஓபிசி கிரீமி லேயரைத் தீர்மானிப்பதற்கான வருமான உச்சவரம்பினை உயர்த்திடவும், கிரீமி லேயர் கணக்கீட்டில் உள்ள பாகுபாடான நடைமுறைகளை நீக்கவும், காலியாக உள்ள பணியிடங்களை ஒதுக்கீட்டின் அடிப்படையில் உடனடியாக நிரப்பவும், OBC, SC, மற்றும் ST சமூகத்தின் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்றார்போல இடஒதுக்கீட்டை உயர்த்திடவும், பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக உறுப்பினர் பி.வில்சன் பேசினார்.

## நீலகிரி மாவட்டம் – எப்பநாடு ஊராட்சியில்

# ரூ.2.34 கோடியில் மேம்படுத்தப்பட்ட சாலைகள் - புதிய நூலகங்கள்!

## தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

நீலகிரி, டிச. 21 - நீலகிரி மாவட்டம் எப்பநாடு ஊராட்சி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், பிரதான் மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.34 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட சாலையினையும், தும்மனட்டி, கக்குச்சி ஆகிய ஊராட்சிப்பகுதிகளில் பொது நூலகங்கள் சிறப்பு திட்டத்தின் கீழ் ரூ.44 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நூலகங்களையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் , அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், 16.12.2025 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள 3 சட்டமன்ற தொகுதிகளிலும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்றைய தினம், நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட கட்டப்பெட்டு முதல் இடுஹட்டி வரை பிரதான் மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏறத்தாழ சுமார் ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட 3 கி.மீ சாலையானது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

அதேபோல், தும்மனட்டி ஊராட்சி கெந்தொரை, கக்குச்சி ஊராட்சி கக்குச்சி பகுதிகளில்; பொது நூலகங்கள் சிறப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ.22 இலட்சம் மதிப்பில் புதிய நூலகங்களும் இன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் ரூ.2.78 கோடி மதிப்பில் நடைபெற்று முடிந்த வளர்ச்சி திட்ட பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையானது நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர் , ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ரமேஷ், உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், திருமதி அனிதா, உதவி செயற் பொறியாளர் (சாலை பணிகள்) சங்கர், உதவி பொறியாளர் செல்வதுரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் தலைமையில்

# திராவிட இயக்க ஆய்வாளர் அர.திருவிடம் நினைவேந்தல்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று புகழுரை!

திருவாரூர்,டிச21.

கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர், திராவிட இயக்க ஆய்வாளரும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவருமான திருவாரூர் அர. திருவிடம் அவர்கள் மறைவு எய்தியதையொட்டி அவரது நினைவேந்தல் நிகழ்வு திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் துணை முதல்வரும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று அர.திருவிடம் அவர்களின் திருஉருவப்படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம் எல்ஏ அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி. ராஜா, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ் விஜயன், முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ. எஸ். குமார் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

தகவல் தொழில்நுட்ப அணி மாநில ஆலோசகர் இதழியலாளர் கோவி. லெனின் அவர்கள் வரவேற்புரையாற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அர. திருவிடத்தின் கழகப் பணிகளையும், கலைஞர் மீது அவர் கொண்டிருந்த அன்பையும் பற்றி பேசி புகழுரை செலுத்தினார்.

நிகழ்வில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் போஸ். வெங்கட்,மாநில செயலாளர் இறையன்பன் குததூஸ் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அ.அசோகன், மாவட்ட அமைப்பாளர் ராஜ். என்கிற கருணாநிதி மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உள்ளிட்ட மாநில,மாவட்ட, ஒன்றிய ,நகர,பேரூர் கழக நிர்வாகிகளும், இளைஞர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளும் பங்கேற்று அர.திருவிடம் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் பங்கேற்று புகழஞ்சலி செலுத்திய அனைவருக்கும் அர. திருவிடம் அவர்களின் மகன் வழக்கறிஞர் செழியன் திருவிடம் நன்றி கூறினார்

முன்னதாக காட்டூரில் கலைஞர் கோட்ட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட அறிவியல் மற்றும் பொழுதுபோக்கு பூங்காவை துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்து பார்வையிட்டார்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் – டி. ஜெயக்குமார் 42/1, மணியம்மை நகர், உடுமலைப்பேட்டை சாலை, தாராபுரம் – 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – கே. கார்த்திகேயன் 2/184, மேற்கு தோட்டம், சிவநாதபுரம், வெள்ளக்கோவில் – 638111, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – டி. சிதம்பரசாமி 168, சி.எஸ்.என். இல்லம், வேலவன் லாட்ஜ் பின்புறம், தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638701, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) பி. ஞானசேகர் 154, பாரதியார் தெரு, தாராபுரம் – 638656, திருப்பூர் மாவட்டம். 2) எம். விஸ்வநாதன் பெல்லம்பட்டி அஞ்சல், குண்டடம் – 638702, தாராபுரம், திருப்பூர் மாவட்டம். 3) எஸ்.வி.பி. சிவக்குமார் 11/360, சிவக்குமார் உணவகம் அடிவாரம், சிவன்மலை அஞ்சல் – 638701, காங்கேயம், திருப்பூர் மாவட்டம். 4) சு. ராஜசேகர் 31/107, பழைய கோட்டைமேடு, தாராபுரம் – 638656, திருப்பூர் மாவட்டம்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

#### கும்பகோணம் மாநகரம்

தலைவர் – வி. அன்பு 3/50, பாரதி நகர், எலுமிச்சங்காப்பாளையம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – செ. மோகன் 12, பாணாதுறை 16வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் – என்.கே. செல்வம் 81, நாகேஷ்வரன் திருமஞ்சன வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) வி. கிருஷ்ணமூர்த்தி 2/22, பிர்மேஷ்டிபுர தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) கே. அமிர்தலிங்கம் 4ஏ, காளியம்மன் கோவில் 3வது தெரு,

மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) எல். செல்வம் 95, நாகேஸ்வரன் தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) பி. கஜேந்திரன் 34/21, பாணாதுறை கீழ வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) ஆர். வைரமூர்த்தி 21, எம்.சி.எஸ்.ஆர். தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6) எம். தமிழ்ச்செல்வன் 15சி, அப்புக்குட்டி சந்து, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) வி. செந்தில்குமார் 50, செக்காங்கண்ணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

### திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட திருக்குமரன் மற்றும் சதீஷ்குமார் ஆகியோர் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவர்களுக்கு பதிலாக கீழ்க் கண்டவர்கள் திருப்பத்தூர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

1 **நா. சுரேஷ்குமார்,** மேல்பள்ளிப்பட்டு கிராமம், பாக்கம்பாளையம் அஞ்சல்,

குருவராஜபாளையம் வழி, அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 632107.

2. **கு. தேசிங்குராஜா**, நாயணசெருவு கிராமம் மற்றும் அஞ்சல், நாயணசெருவு ஊராட்சி, நாட்றாம்பள்ளி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் – 635852.

### கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ம.பொன்னுசாமி அவர்களுக்கு பதிலாக, **எஸ். ஈஸ்வரமூர்த்தி (எ) பொன்னுசாமி** (106, சென்னியாண்டவர் வீதி, பீம்சேட் தோட்டம், கோட்டைக்காடு, செம்மேடு, கோவை–641114) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி